பயணிகள் வசதிக்காக இன்று முதல்

# மெட்ரோ ரயில் சேவை அதிகாலை 5.30 முதல் இரவு 9 மணி வரை இயக்கம்

சென்னை, ஜூலை 8-

கொரோனா தொற்று பரவல் படிப்படியாக குறைந்து வருவதை தொடர்ந்து அரசு பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளது. இதனால் சென்னை மெட்ரோ ரயில் சேவைகள் கடந்த 21ம் தேதி முதல் 50 சதவீத இருக்கை வசதிகளுடன் இயங்க தொடங்கியது. பயணிகளின் வசதிக்காகவும் இன்று முதல் காலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரை ரயில் சேவைகள் இயக்கப்பட உள்ளன. நெரிசல்மிகுந்த நேரங்களில் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் தலா ஒரு மணி நேரம் நீட்டிக்கப்பட்டு 5 நிமிட இடைவெளியில் இயக்கப்படும். மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

அனைத்து பயணிகளும் முகக்கவசம் சரியாக அணிந்துள்ளனரா என்பதை கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது. கடந்த மாதம் 21ம் தேதி முதல் ஜூலை 6ம் தேதி வரை 34 பயணிகளிடம் அபராதமாக ரூ.6,800 வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது